Ours bank with
Bank of Baroda

மதுரை மணி

தினசரி தமிழ் நாளிதழ்

Madurai Mani Tamil Evening Daily

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)

2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.

மதுரை பதிப்பு	*மணி 55	* ஓசை 270	உள்ளூர் - 28.09.2026	திங்கட்கிழமை	விலை ரூ.4/-	பக்கங்கள்-4	Website : http://maduraimaninews.com
Madurai Edition	*Vol 55	* Issue 270	வெளியூர் - 29.09.2026	செவ்வாய்க்கிழமை	Price Rs. 4/-	Pages -4	Email: maduraimaninews@gmail.com

மஹாளய பட்சம் - செய்ய வேண்டியது /கூடாதது!

IISc–ல் 30 முத்திய அரசு வேலைகள்!

தீபாவளிக்கு முன்பே விலை 'ஷாக்'!

வங்கி வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு!

மழலை விரலில் தங்கம்...

'தாய்மாமன் தங்க மோதிரம்' திட்டம் தொடக்கம்! குழந்தைக்கு மோதிரம் அணிவித்த முதல்வர்!

வழிநெடுகிலும் மக்கள் வெள்ளம்... வரவேற்பில் மதுரை!!







மதுரை, செப். 28–

மதுரை ராஜாஜி மருத்துவமனையில், தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்வர் விஜய் துவங்கி வைத்தார்; அவர் குழந்தைக்கு ஒரு கிராம் தங்க மோதிரத்தை அணிவித்தார்.

அரசு மருத்துவமனைகளில் பிறக்கும் குழந்தைகளுக்கு 'தாய்மாமன் தங்க மோதிரம்' வழங்கும் திட்டத்தை துவக்கி வைக்க முதல்வர் விஜய் இன்று (செப்., 28) காலை மதுரைக்கு வருகை தந்தார். விமான நிலையத்தில் உற்சாக தவெகவினர் உற்சாக வரவேற்பு அளித்தனர். மதுரைக்கு வந்துள்ள முதல்வர் விஜய், வழியெங்கும் திரண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களை பார்த்து கை அசைத்தபடி ரோடு ஷோ நடத்தினார்.

முதல்வர் விஜய், வழியில் மீனாட்சி அம்மன் வேடத்தில் வரவேற்பு அளித்த குழந்தையை எடுத்து கொஞ்சினார். மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை முதல்வர் விஜய் துவங்கி வைத்தார். அவர் குழந்தைக்கு ஒரு கிராம் தங்க மோதிரத்தை அணிவித்தார். அவர் குழந்தைகளை சிறிது நேரம் தூக்கி கொஞ்சி மகிழ்ந்தார்.

மதுரை அரசு ராஜாஜி மருத்துவ மனையில் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டத்தை தொடக்கிவைத்த முதல்வர் விஜய், அங்கிருந்து காந்தி அருங்காட்சியகத்துக்கு சாலை வலம் மேற்கொண்டார்.

பின்னர், காந்தி அருங்காட்சியகம் வந்த அவர், காந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

இதையடுத்து ரூ. 10.25 கோடி மதிப்பீட்டில் நவீன முறையில் புனரமைக்கப்பட்டுள்ள அருங்காட்சியகத்தை முதல்வர் விஜய் திறந்து வைத்தார். சுதந்திரப் போராட்ட வரலாறு, மகாத்மா காந்தியின் வாழ்க்கை வரலாறு, காந்தியின் தமிழகப் பயணம் உள்ளிட்ட தகவல்கள், நவீன டிஜிட்டல் மற்றும் தொடுதிரை தொழில்நுட்பங்கள் மூலம் அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள புதிய காட்சியமைப்புகளை முதல்வர் விஜய் பார்வையிட்டார்.

சுமார் இரண்டரை ஆண்டுகளாக மேற்கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், இன்று முதல் அருங்காட்சியகம் மீண்டும் பொதுமக்கள் பார்வைக்காக திறக்கப்பட உள்ளது.

மீனாட்சி தரிசனம்

இந்நிகழ்ச்சி முடிந்ததும் அரசு சுற்றுலா மாளிகை செல்கிறார். மதிய உணவு, ஓய்வுக்குப்பின் மாலை மீனாட்சி அம்மன் கோயிலில் தரிசனம் செய்கிறார். பின் அங்கிருந்து விமான நிலையம் சென்று சென்னை புறப்படுகிறார்.

பலத்த பாதுகாப்பு

முதல்வர் வருகையை முன்னிட்டு விமான நிலையத்தில் 5 அடுக்கு போலீஸ் பாதுகாப்பும், விமான நிலையத்திலிருந்து அரசு மருத்துவமனை வரை சாலையின் இருபுறமும் போலீஸ் பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

ஜூன் 22-ந்தேதி முதல் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - வழிகாட்டு முறைகள் அறிவிப்பு!

சென்னை, செப். 28–

முதலமைச்சர் விஜய்யால், தாய்மையினையும், குழந்தை பிறப்பின் பெருமையையும் உணர்த்தவும், அரசு மருத்துவமனைகளில் நிகழும் குழந்தை பிறப்பை அதிகரிக்கவும், பொது மக்களுக்கு அரசு மருத்துவமனைகளின் மீதுள்ள நம்பிக்கையை மேலும் வலுப்ப டுத்தவும் தாய்மாமன் தங்க மோதிரம் திட்டம் சட்டசபையில் அறிவிக்கப்பட்டது.



இதனைத்தொடர்ந்து, தமிழகம் முழுவதும் தாய்மாமன் தங்க மோதிரம் வழங்கும் திட்டம் முதலமைச்சரால் இன்று மதுரையில் தொடங்கி வைக்கப்படுகிறது.

அதனை தொடர்ந்து ஜூன் 22–ந்தேதி அதிகாலை 12 மணி முதல், அரசு மருத்துவமனை மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உயிருடன் பிறந்த அனைத்து குழந்தைகளுக்கும் ஒரு கிராம் தங்க மோதிரம் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் பயன்பெற, இ–கே.ஒய்.சி. பதிவு பெற்ற ஆதார் அட்டை, குடியிருப்பு சான்றிதழ், வாக்காளர் அடையாள அட்டை, குடும்ப அட்டை, தொழிலாளர் நல வாரியம் மூலம் வழங்கப்பட்ட அடையாள அட்டை, அஞ்சல் துறையின் மூலம் வழங்கப்பட்ட முகவரி சான்றிதழ் உள்ளிட்ட ஆறு தமிழ்நாடு குடியிருப்பு அடையாளச் சான்றிதழ்கள் குறிப்பிடப்பட்டுள்ளது. அதில் ஏதேனும் ஒரு அடையாளச் சான்று பெற்ற தாய்மாராக இருக்க வேண்டும்.

பயனாளிகளின் வசதிக்காக அந்தந்த பகுதிகளிலிருந்து வாகன வசதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மோதிரம் காலை 10 மணி முதல் 1 மணி வரை மற்றும் மதியம் 2 மணி முதல் 4 மணி வரை என இரு வேளைகளில் வழங்கப்படும்.

கூட்ட நெரிசலைத் தவிர்க்கும் வகையில், ஒவ்வொரு மையத்திலும் நாள்தோறும் காலை 25 பேருக்கும், மதியம் 25 பேருக்கும் மட்டுமே மோதிரம் வழங்கப்படும்.

மேலும் இன்று 28.9.2026 தேதிக்கு பிறகு பிறக்கும் குழந்தைகளுக்கு பிரசவம் நடைபெறும் அந்தந்த அரசு மருத்துவமனைகளிலேயே மோதிரம் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

இதற்கான அழைப்பிதழ்கள் நாளை முதல் அந்தந்த பகுதி கிராம சுகாதார செவிலியர்கள் மூலம் பயனாளிகளுக்கு வழங்கப்படும். அழைப்பிதழில் குறிப்பிடப்பட்டுள்ள தேதி மற்றும் நேரத்தில் மட்டும் பயனாளிகள் வருகை தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது

மேற்கண்ட தகவலை மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.


செஸ் ஒலிம்பியாட்டில் இந்தியா 2 பதக்கம்; இளைஞர்களை விளையாட ஊக்குவிக்கட்டும் என்கிறார் பிரதமர் மோடி!

புதுடில்லி, செப். 28–

செஸ் ஒலிம்பியாட்டில் இந்தியா பெற்ற வெற்றிகள் பல இளைஞர்களை செஸ் விளையாட ஊக்குவிக்கட்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

உஸ்பெகிஸ்தானில், செஸ் ஒலிம்பியாட் 46வது சீசன் நடந்தது. இதன் ஓபன் பிரிவு 11வது சுற்றில் இந்தியா, ஹங்கேரி அணிகள் மோதின. இந்திய அணி (405.5 புள்ளி) 2வது இடம் பிடித்து வெள்ளி வென்றது. ஜெர்மனிக்கு (386.5) வெண்கலம் கிடைத்தது. உஸ்பெகிஸ்தான் அணி (20 புள்ளி) சாம்பியன் ஆனது.

அதேபோல் பெண்கள் பிரிவு 11வது சுற்றில் இந்தியா, ஜார்ஜியா அணிகள்



மோதின. இப்போட்டி 2.0 – 2.0 என 'டிரா' ஆனது. இந்தியாவின் ஹம்பி வெற்றி பெற்றார். வந்திகா அகர்வால், சவிதா ஸ்ரீ, தங்களது போட்டியை 'டிரா' செய்தனர். திவ்யா, தோல்வியை தழுவினார். 11 சுற்றுகளின் முடிவில், இந்திய பெண்கள் அணி 17 புள்ளிகளுடன் வெண்கலம் வென்றது.

செஸ் ஒலிம்பியாட்டில் இந்தியாவுக்கு ஒரு வெள்ளி, ஒரு வெண்கலம் என, 2 பதக்கம் கிடைத்தது. இது குறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது: நமது செஸ் வீரர்களுக்கு வாழ்த்துகள்; அவர்களின் ஆர்வமும் மனவுறுதியும் முன்மாதிரியாக திகழ்கின்றன; இந்த வெற்றிகள், இன்னும் பல இளைஞர்களை செஸ் விளையாடவும், அதில் சிறந்து விளங்கவும் ஊக்குவிக்கட்டும்'' என குறிப்பிட்டுள்ளார்.

இண்டிகோ விமானத்தின் வால்பகுதி தரையில் உரசியதால் பெங்களூரு விமான நிலையத்தில் பரபரப்பு!

புதுடெல்லி, செப். 28–

கவுத்தியிலிருந்து பெங்களூருக்கு இண்டிகோ விமானம் இயக்கப்பட்டு வருகிறது. இந்த விமானம் வழக்கம் போல நேற்று கவுகாத்தியில் இருந்து புறப்பட்டு பெங்களூருவில் உள்ள கெம்பேகௌடா சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது. அப்போது, விமான நிலைய பகுதி யில் பலத்த காற்று வீசியது. இத னால், தடுமாறிய விமானத்தின் வால்ப குதி எதிர்பாராத வகையில் தரையில் மோதியது. இதனால் விமானத்தில் இருந்த பயணிகள்



அதிர்ச்சி அடைந்தனர். எனினும், சாதுர்யமாக செயல்பட்ட விமானி, விமானத்தை பத்திரமாக லேண்டிங் செய்தார். இந்த சம்பவம் குறித்து இண்டிகோ நிறுவனம் கூறியதாவது; விமானத்தில் இருந்த பயணிகள் மற்றும் பணியாளர்கள் அனைவரும் பாதுகாப்பாக உள்ளனர். விமானம் பார்க்கிங் பகுதிக்கு இழுத்து செல்லப்பட்டு பயணிகள் அனைவரும் பத்திரமாக இறக்கிவிடப்பட்டனர். அந்த விமானம் பராமரிப்புப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. தேவையான அனுமதிகள் பெறப்பட்ட பிறகு விமானம் மீண்டும் இயக்கப்படும் என இண்டிகோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

தலையங்கம்

மதுரை மணி

திங்கட்கிழமை 28.09.2026

விசுவாவசு தமிழ் வருடம்

புரட்டாசி மாதம் 11-ம் தேதி

ஹார்முஸ் பதற்றம்: போர் அல்ல, பேச்சே தீர்வு!



உலகின் முக்கிய எண்ணெய் போக்குவரத்துப் பாதைகளில் ஒன்றான ஹார்முஸ் ஜலசந்தி மீண்டும் கடும் பதற்றத்தின் மையமாகியுள்ளது. ஈரான்அமெரிக்க மோதலின் தாக்கம் இரு நாடுகளுடன் முடிவதில்லை; வளைகுடா நாடுகளின் பாதுகாப்பு, சர்வதேச கப்பல் போக்குவரத்து, கச்சா எண்ணெய் விலை என உலகப் பொருளாதாரத்தையே அது பாதிக்கிறது. செப்டம்பர் 9–ஆம் தேதி ஹார்முஸ் அருகே கப்பல்கள் மீது பெரிய அளவில் தாக்குதல்கள் நடைபெற்றதைத் தொடர்ந்து பிரென்ட் கச்சா எண்ணெய் விலை 100 டாலரைத் தாண்டியது.

இந்தப் பின்னணியில், அமெரிக்கா தனது ராணுவ அழுத்தத்தையும் ஈரான் துறைமுகங்கள் மீதான பொருளாதாரத் தடையையும் தளர்த்தினால், ஹார்முஸ் ஜலசந்தியை ஒரு வாரத்திற்குள் மீண்டும் திறக்கத் தயாராக இருப்பதாக ஈரான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 24–ஆம் தேதி வெளியான தகவலின்படி, ஹார்முஸ் பாதையைத் திறப்பது மற்றும் அமெரிக்கத் தடைகளை படிப்படியாக நீக்குவது குறித்து இருதரப்பும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. Reuters

அதேநேரத்தில், இருதரப்புக்கும் இடையே முக்கிய கருத்து வேறுபாடுகள் தொடர்வதாகவும், பேச்சுவார்த்தை தொடர வேண்டியது அவசியம் என்றும் ஈரான் தரப்பில் கூறப்பட்டுள்ளது. செப்டம்பர் 26 நிலவரப்படி, அமெரிக்காவின் இறுதிநிலைப்பாடுமத்தியஸ்தர்கள் மூலம் அதிகாரப்பூர்வமாகத் தெரிவிக்கப்படவில்லை என ஈரான் வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அராக்சி தெரிவித்துள்ளார். Reuters

ஹார்முஸ் பகுதியில் ஒவ்வொரு புதிய தாக்குதலும் எண்ணெய் சந்தையை மட்டுமல்ல; இந்தியா உள்ளிட்ட இறக்குமதி சார்ந்த நாடுகளின் எரிபொருள் செலவு, போக்குவரத்து மற்றும் விலைவாசியிலும் அழுத்தத்தை ஏற்படுத்தக்கூடும். எனவே ராணுவ மோதலை மேலும் விரிவுபடுத்தாமல், கப்பல் போக்குவரத்துப் பாதுகாப்பை உறுதி செய்து, பேச்சுவார்த்தைக்கு முன்னுரிமை அளிப்பதே தற்போதைய அவசியம்.

– ஆசிரியர்

மதுரை மணி நாளிதழ்



மதுரை அரசு சட்டக்கல்லூரியில் இரண்டாவது பட்டமளிப்பு விழாவில் மின்சாரம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் சி.டி.ஆர். நிர்மல்குமார், பா. அட்சயா M.A.M.L., என்ற மாணவிக்கு பட்டம் வழங்கி பாராட்டினார்.

வங்கி வேலை நிறுத்தம் ஒத்திவைப்பு!



சென்னை, செப். 28– வாரத்தில் 5 நாள்கள் மட்டுமே வேலை உள்பட பல்வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, திங்கள்கிழமை (செப். 28) முதல் 3 நாள்கள் அறிவிக்கப்பட்டிருந்த வங்கி ஊழியர்கள் வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டது.

வாரத்தில் 5 நாள்கள் மட்டுமே வேலை, ஓய்வூதிய பலன்களைப் புதுப்பித்து மேம்படுத்த வேண்டும், அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் ஒரே மாதிரியாக அகவிலைப்படி வழங்க வேண்டும், தேசிய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் உள்ள வங்கி ஊழியர்கள் பழைய ஓய்வூதியத் திட்டத்துக்கு மாறும் வாய்ப்பை அளிக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, நாடு முழுவதும் கடந்த செப்.11–ஆம் தேதி வங்கி ஊழியர்கள் ஒருநாள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

இதன் தொடர்ச்சியாக தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, நாடு முழுவதும் திங்கள்கிழமை முதல் 3 நாள்கள் அவர்கள் வேலைநிறுத்தம் அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், ஐக்கிய வங்கி தொழிற்சங்கங்கள் கூட்டமைப்பு (யுஎஃப்பியு), இந்திய வங்கிகள் கூட்டமைப்பு (ஐபிஏ) இடையே ஞாயிற்றுக்கிழமை இரவு 9.30 மணியளவில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில், இதர சனிக்கிழமைகளையும் விடுமுறை நாள்களாக அறிவிப்பது தொடர்பாக ஆலோசிக்க யுஎஃப்பியு, ஐபிஏவின் உயர்நிலை கமிட்டி அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து, வேலைநிறுத்தம் ஒத்திவைக்கப்படுவதாக யுஎஃப்பியு அறிவித்தது. முன்னதாக, வேலைநிறுத்தம் நடைபெறும் 3 நாள்களின்போது தங்கள் ஏடிஎம்களில் பணம் எடுக்க கட்டணம் வசூலிக்கப்படாது என்று பாரத ஸ்டேட் வங்கி, பஞ்சாப் நேஷனல் வங்கி, பரோடா வங்கி, இந்திய யூனியன் வங்கி, இந்தியன் வங்கி உள்ளிட்ட பொதுத் துறை வங்கிகள் அறிவித்திருந்தன.

குரூப்-1 முதல்நிலை தேர்வு: 57 ஆயிரத்து 612 பேர் ஆப்சென்ட்; 2 மாதங்களில் தேர்வு முடிவு!



சென்னை, செப். 28– குரூப்–1 முதல்நிலை தேர்வில் 57 ஆயிரத்து 612 பேர் ஆப்சென்ட் ஆகியுள்ளனர். 2 மாதங்களில் தேர்வு முடிவு வெளியிடப்படும்.

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (டி.என்.பி.எஸ்.சி.) மூலம் குரூப்–1 பணியிடங்களில் 12 துணை கலெக்டர், 2 வணிகவரி உதவி ஆணையர், 3 கூட்டுறவு சங்கங்களின் துணைப்பதிவாளர், 8 தமிழ்நாடு பதிவு பணி மாவட்ட பதிவாளர், ஒரு தொழிலாளர் உதவி ஆணையர்என26காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கான அறிவிப்பு கடந்த ஜூன் மாதம் 23–ந்தேதி வெளியிடப்பட்டது.

ஜூலை 29 ந்தேதி வரை விண்ணப்பிக்க அவகாசம் வழங்கப்ப ட்டது. இதற்கிடையில்குரூப்–1பணியிடங்களில் மேலும் 20 காலிப்பணியிடங்கள் அதிகரிக்கப்பட்டன. இதன் மூலம் காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை 46 ஆக அதிகரித்தது. குரூப்–1 முதல்நிலைத் தேர்வு செப்டம்பர் மாதம் 27–ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த தேர்வுக்கு பட்டதாரிகள் போட்டிப்போட்டு விண்ணப்பித்தனர்.

தமிழகம்முழுவதும்விண்ணப்பித்ததில் 95 ஆயிரத்து 984 ஆண்கள், 1 லட்சத்து 27 ஆயிரத்து 441 பெண்கள், மூன்றாம் பாலினத்தவர்கள் 15 பேர் என 2 லட்சத்து 23 ஆயிரத்து 440 பேர் அனுமதிக்கப்பட்டனர். இந்த நிலையில் குரூப்–1 முதல்நிலை தேர்வு நேற்று நடைபெற்றது. தேர்வுக்காக தமிழகம் முழுவதும் 754 தேர்வு அறைகள் அமைக்கப்பட்டிருந்தன. சென்னையில் 128 மையங்களில் தேர்வு நடைபெற்றது.

தமிழகம் முழுவதும் நடைபெற்ற குரூப்–1 முதல்நிலை தேர்வை 1 லட்சத்து 65 ஆயிரத்து 828 பேர் எழுதினர். சதவீத அடிப்படையில் இது 74.22 சதவீதமாகும். தேர்வு எழுத வராமல் 57 ஆயிரத்து 612 பேர் 'ஆப்சென்ட்' ஆகியுள்ளனர். இது 25.78 சதவீதமாகும். முதல்நிலை தேர்வில் தேர்ச்சி பெறுபவர்கள், முதன்மை தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

தேர்வு முடிவு தொடர்பாக டி.என்.பி.எஸ்.சி. தலைவர் எஸ்.கே.பிரபாகர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில், குரூப்–1 முதல்நிலை தேர்வின் முடிவு 2 மாதங்களில் வெளியிடப்படும். முழுமையான தேர்வுமுடிவுகள் வெளியாகும்போது கூடுதல் காலிப்பணியிடங்கள் அறிவிப்பு வெளியிட வாய்ப்பு உள்ளது என்றார்.

வீரமணியின் லீலைகளை அம்பலப்படுத்திய என்னையே குற்றவாளி ஆக்குவதா? - சாந்தி!



சென்னை, செப். 28– பாலியல் வழக்கில் வீரமணியின் லீலைகளை அம்பலப்படுத்திய என்னையே குற்றவாளி ஆக்குவதா என்று போலீசாரிடம் சாந்தி அழுது புலம்பினார்.

'ஜெம்' கிரானைட் தொழில் அதிபர் வீரமணி சிறுமிகளை பாலியல் வன்கொடுமை மூலம் சீரழித்தகுற்றத்துக்காக போக்சோ சட்டத்தில் கைது செய்யப்பட்டு புழல் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். அவருடைய காம களியாட்டத்துக்கு துணை போனதாக சாந்தி என்ற பெண்ணும், அவரது கணவருமான மகேந்திர சிம்கன் என்பவரும் கைது செய்யப்பட்டனர்.

இந்தநிலையில் சாந்தி, மகேந்திர சிம்கன் ஆகியோரை 3 நாட்கள் போலீஸ் காவலில் எடுத்து விசாரிக்க சென்னை போக்சோ சிறப்பு கோர்ட்டு அனுமதி அளித்தது. அதன்படி, இவர்களிடம் துணை போலீஸ் கமிஷனர் கீதாஞ்சலி, உதவி கமிஷனர் ராஜலட்சுமி ஆகியோர் விசாரணை மேற்கொண்டனர்.

ஏற்கனவே வீரமணியிடம் நடத்தப்பட்ட விசாரணையில் கிடைத்த தகவலின் அடிப்படையில் சாந்தி, மகேந்திர சிம்கன் ஆகியோரிடம் 200–க்கும் மேற்பட்ட கேள்விகளை எழுப்பி அவர்களது வாக்கு மூலத்தை போலீசார் பதிவு செய்தனர். வீரமணியால் பாதிக்கப்பட்ட சிறுமிகள் எத்தனை பேர்?, எவ்வளவு நாட்களாக இந்த குற்றம் நடந்தது?. வேறு யார் யாருக்கு எல்லாம் இந்த குற்றச் சம்பவத்தில் தொடர்பு உள்ளது? என கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர்.

சிறுமிகளிடம் பாலியலில் ஈடுபட்ட வீடியோவை காண்பித்து வீரமணியை மிரட்டி பணம் பறிக்க பின்னணியில் இருந்தவர்கள் யார்? யார்?. அவ்வாறு வீரமணியிடம் இருந்து எவ்வளவு பணம் பறிக்கப்பட்டது?, இந்த மிரட்டலில் அரசியல் கட்சி பிரமுகர்கள் ஈடுபட்டார்களா? என்றும் அவர்களிடம் போலீசார் கேள்வி எழுப்பினர்.

இந்த விசாரணையின்போது சாந்தி மிகுந்த சோகத்துடன் இருந்துள்ளார். பல நேரங்களில் தன் மீது எந்த தவறும் இல்லை என்றும், வீரமணியின் லீலைகளை அம்படுத்திய தன்னையே குற்றவாளி கூண்டில் நிறுத்தி விட்டீர்களே? என போலீசாரை பார்த்து அழுது புலம்பி உள்ளார்.

வீரமணிக்கு உடன்பிறந்த சகோதரர்கள் 4 பேர் இருந்தபோதும் அவர்களுடன் வீரமணிக்கு பேச்சுவார்த்தை இல்லை என கூறப்படுகிறது. இதுதவிர, அவரது உறவினர்கள் நிறைய பேர் அவருக்கு எதிரிகளாக உள்ளதாகவும் தெரிகிறது. இந்த அடிப்படையில் வீரமணியின் எதிரிகள் யார், யார்? எதிரிகள் தூண்டுதலின் பேரில் இந்த விவகாரம் வெளிக்கொண்டு வரப்பட்டதா? என்றும் சாந்தியிடம் போலீசார் கேள்வி எழுப்பி உள்ளனர்.

போலீசாரின் பல கேள்விகளுக்கு பதில் அளித்த சாந்தி, சில கேள்விகளுக்கு மவுனமாக இருந்ததாகவும் கூறப்படுகிறது. சாந்தியின் கணவர் மகேந்திர சிம்கனிடம் போலீசார் பல கிடுக்கிப்பிடி கேள்விகளை எழுப்பி வாக்கு மூலமாக பதிவு செய்தனர். தேனாம்பேட்டையில் உள்ள சாந்தியின் வீட்டுக்கு அவரை அழைத்து சென்ற போலீசார் பாலியல் தொடர்பான ஆவணங்களை கைப்பற்றினர்.

"தங்க மோதிரத்தை விட தரமான பால் தான் தேவை" - தமிழிசை சவுந்தரராஜன்!




சென்னை, செப். 28– தங்கத்தை விட தரமான பால் தான் குழந்தைகளுக்கு இன்றைய தேவை என்று பா.ஜ.க. முன்னாள் மாநில தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக, தனது 'எக்ஸ்' தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது;–

தேவைகளை முதலில் கவனியுங்கள் முதல்–அமைச்சரவர்களே. குழந்தைகளுக்கு தேவை பால். தங்க மோதிரம் கொடுக்கப் போகிறீர்கள் தரமான பாலுக்கான தட்டுப்பாடை எப்பொழுது சரி செய்யப் போகிறீர்கள். தங்கத்தை விட தரமான பால் தான் குழந்தைகளுக்கு இன்றைய தேவை.

சென்னை மக்களின் தேவை 30 லட்சம் லிட்டர்கள் ஆனால் ஆவின் 14.5 லட்சம் லிட்டர்கள் தான் ஆவின் விநியோகிக்கிறது.. ஆவின் பால் பூத்துகளுக்கு செல்வதற்கு முன்னாலேயே அவை விற்று தீர்ந்து விடுகிறது அதிக விலை கொடுத்து தனியார் பால் வாங்க வேண்டி இருக்கிறது இதுதான் இன்று தமிழக மக்கள் சொல்வது. தங்கம் மோதிரத்தை விட தங்களது தேவை இன்று பால் தான்.. என்று குழந்தைகள் சொல்லாமல் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



மகாளய பட்சம் - செய்ய வேண்டியது /கூடாதது!



மகாளய பட்ச காலத்தில் (2026 செப்டம்பர் 27 முதல் அக்டோபர் 10 வரை) முன்னோர்களை நினைத்து திதி, தர்ப்பணம் கொடுத்து, எளிய முறையில் படையலிட்டு வழிபடுவது நமது கடமையாகும். இக்காலத்தில் கடைபிடிக்க வேண்டிய செய்ய வேண்டியவை மற்றும் செய்யக்கூடாதவை பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன: [1, 2, 3]

செய்ய வேண்டியவை (Dos)

தர்ப்பணம் மற்றும் ஸ்ராத்தம்: தங்களின் குடும்ப வழக்கப்படி முன்னோர்களுக்குரிய திதி நாட்களில் அல்லது மகாளய அமாவாசை அன்று தர்ப்பணம் மற்றும் சிரார்த்த சடங்குகளைச் செய்ய வேண்டும்.

தினசரி படையல்: தினமும் மதிய வேளையில் சுத்தமாகச் சமைத்து, வாழை இலையில் முன்னோர்களுக்குப் பிடித்த உணவைப் படைத்து வழிபடலாம்.

காகத்திற்கு உணவு: முன்னோர்களின் ஆன்மா திருப்தி அடைய தினமும் சமைத்த உணவில் சிறிதளவு எடுத்து காகத்திற்கு வைக்க வேண்டும். காகம் முன்னோர்களின் வடிவமாகக் கருதப்படுகிறது.

அன்னதானம்: இயலாதவர்களுக்கு அல்லது விலங்குகள், பறவைகளுக்கு (நாய், எறும்பு, காகம்) இந்த 15 நாட்களும் உங்களால் முடிந்த அன்னதானம் வழங்குவது மிகவும் சிறப்பு.

மாலை தீபம்: மாலை வேளையில் வீட்டின் பூஜை அறையில் முன்னோர்களை நினைத்து நல்லெண்ணெய் ஊற்றி தனியாக அகல் விளக்கு ஏற்றி வழிபட வேண்டும்.

செய்யக்கூடாதது / தவிர்க்க வேண்டியது (Don'ts)

சுப நிகழ்ச்சிகள்: மகாளய பட்சம் பித்ருக்களுக்கு உரிய காலம் என்பதால், இக்காலத்தில் திருமணம், நிச்சயதார்த்தம், வளைகாப்பு, வீடு வாங்குவது போன்ற சுபகாரியங்களைச் செய்வதைத் தவிர்க்க வேண்டும்.

அதிகாரப்பூர்வ கொள்முதல்கள்: புதிய ஆடைகள், தங்கம், வெள்ளி அல்லது சொத்துக்கள் வாங்குவதை பலரும் இக்காலத்தில் தவிர்ப்பதுண்டு.

அசைவ உணவு: இந்த 15 நாட்களும் வீட்டில் அசைவ உண சமைப்பதையும் உண்பதையும் தவிர்க்க வேண்டும். பூண்டு, வெங்கலம் போன்ற தாமச உணவுகளைக் குறைத்து சுத்தமான சைவ உணவை உட்கொள்வது நலம்.

முடி வெட்டுதல்: தலைமுடி திருத்துவது, தாடி ஷேவ் செய்வது போன்றவற்றை இக்காலத்தில் செய்யக்கூடாது என்று நம்பப்படுகிறது.

கோபம் மற்றும் சண்டைகள்: வீட்டைத் தூய்மையாகப் பராமரிக்க வேண்டும். குடும்பத்தில் சண்டை சச்சரவுகள் இன்றி அமைதியைக் கடைபிடிக்க வேண்டும்.

பழனி சண்முக நதியை தூய்மைபடுத்தும் பணி!



பழனியில் புகழ்பெற்றது சண்முக நதியாகும். இந்த நதியில் பக்தர்கள் குளித்துவிட்டு தான் பின்பு பழனி முருகப்பெருமானை சாமி தரிசனம் செய்யச் செல்வது ஐதீகமாகும். தற்பொழுது இந்த சண்முக நதி குப்பைகளும் கூலங்களும் அமலைச் செடிகளும் துணிகளும் பிளாஸ்டிக் பாட்டில்களும் பிளாஸ்டிக் பைகளுமாக காட்சியளித்தது. இந்த நிலையில், பழனியைச் சேர்ந்த வீ.த.லீடர்ஸ் அமைப்பினர் ஐந்தாவது முறையாக நேற்று குப்பைகளை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். இதில் வீ.த.லீடர்ஸ் கனகராஜ் ஆனந்தகுமார், செந்தில்குமார், சமூக ஆர்வலர் நிர்மல், ராகவன் மற்றும் பாரத் வித்யா பவன் பள்ளி மாணவர்கள் பங்கேற்றனர்



பழனி அருகே தாராபுரம் சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, மூலனூரில் பழனியைச் சேர்ந்த அதிமுகவினர் வாக்கு சேரித்தனர். அருகினில் மாவட்டச் செயலாளர் டாக்டர் பரமசிவம், கே ரவி மனோகரன் எம் எல் ஏ, மாவட்ட இளைஞர் அணி செயலாளர் எஸ் பி அன்வர்தீன், ஒன்றிய செயலாளர்கள் டி முத்துசாமி ஆர் எம் டி சி மாரியப்பன் ஆகியோர் உள்ளனர்.

மலை ரெயிலில் ஆபத்தான முறையில் செல்பி எடுக்கக்கூடாது!



நீலகிரி, செப். 28– நீலகிரி மாவட்டம் குன்னூர் ரெயில் நிலையத்தில், ரெயில்வே பாதுகாப்பு படை மற்றும் ரெயில்வே போலீஸ் சார்பில், மேட்டுப்பாளையத்தில் இருந்து ஊட்டிக்கு மலை ரெயிலில் வந்த சுற்றுலா பயணிகள் மற்றும் பள்ளி மாணவ–மாணவிகளுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

நிகழ்ச்சியில் ரெயில்வே பாதுகாப்பு படை அதிகாரி பேசுகையில், நீலகிரி மாவட்டம் பிளாஸ்டிக் இல்லாத பகுதியாக அறிவிக்கப்பட்டு உள்ளதால், பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தவிர்க்க வேண்டும், ஓடும் மலை ரெயிலில் ஆபத்தான முறையில் செல்பி எடுக்கக்கூடாது, முன், பின் தெரியாத நபர்களிடம் இருந்து தின்பண்டங்கள் மற்றும் உணவு வாங்கி சாப்பிட கூடாது. ரெயில் அல்லது ரெயில் நிலையத்தில் உரிமை கோரப்படாத மர்ம பொருட்கள் கிடந்தால், அதை தொடாமல் உடனடியாக ரெயில்வே அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்க வேண்டும் என்றார்.

நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



காலையில் தெரியும் 7 அறிகுறிகள்... சர்க்கரை அளவை செக் பண்ணுங்க!



காலையில் எழுந்ததும் உடலில் ஏற்படும் சில மாற்றங்கள் தொடர்ந்து காணப்பட்டால் அவற்றை அலட்சியப்படுத்தக் கூடாது. அதிக தாகம், வாய் வறட்சி, இரவில் அடிக்கடி சிறுநீர் கழித்தல், போதுமான தூக்கத்திற்குப் பிறகும் சோர்வு, மங்கலான பார்வை, வழக்கத்திற்கு மாறான அதிக பசி போன்றவை உயர் ரத்த சர்க்கரையுடன் தொடர்புடைய அறிகுறிகளாக இருக்கலாம்.

அதேபோல், கைகால்களில் அடிக்கடி கூச்ச உணர்வு, எரிச்சல் அல்லது மரத்துப்போதல், காயங்கள் விரைவில் ஆறாமல் இருப்பது, தோல் பிரச்னைகள் போன்றவற்றையும் கவனிக்க வேண்டும். குறிப்பாக இந்த அறிகுறிகள் தொடர்ந்து நீடித்தால் ரத்த சர்க்கரை அளவை பரிசோதித்துக் கொள்வது அவசியம். இருப்பினும், அறிகுறிகளை மட்டும் வைத்து நீரிழிவு நோயை உறுதி செய்ய முடியாது. உரிய ரத்தப் பரிசோதனை செய்து மருத்துவரின் ஆலோசனையைப் பெறுவது முக்கியம்.

வங்கியில் அக்கவுண்ட் வைத்திருப்பவர் இறந்துவிட்டால் பணம் என்ன ஆகும்? ரிசர்வ் வங்கி வெளியிட்ட விதிமுறைகள்!



புதுடெல்லி, செப். 28–

வங்கிக் கணக்கு விஷயத்தில் முக்கியமான விதிமுறைகளை அவ்வப்போது ரிசர்வ் வங்கி தனது வாடிக்கையாளர்களுக்கு நினைவுபடுத்துகிறது. அந்த வகையில், வாட்ஸ் அப் வாயிலாக வாடிக்கையாளர்களுக்கு ரிசர்வ் வங்கி மெசேஜ் ஒன்றை அனுப்பி வருகிறது. அந்த மெசேஜில் வங்கி கணக்கு வைத்து இருப்பவர்கள் இறந்துவிட்டால், அவரது கணக்கில் இருக்கும் பணம் என்ன ஆகும்? உறவினர்கள் அதை உரிமை கோர முடியுமா? அதற்கான வழிமுறைகள் என்ன? என்பது பற்றிய விவரங்களை தெளிவுப்டுத்தியுள்ளது. ரிசர்வ் வங்கி இது தொடர்பாக வெளியிட்ட அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

வங்கி கணக்கு வைத்திருப்பவர் இறந்தபின், வங்கிக் கணக்குகளில் வைத்திருக்கும் தொகை என்ன ஆகும்?

அத்தகைய கணக்குகளில் உரிமை கோரும் முறை இப்போது மிகவும் எளிமையாகவும் காலக்கெடுவுடனும் செய்யப்பட்டுள்ளது!

இந்த 3 படிகளைப் பின்பற்றுங்கள்:

(1) உங்கள் வங்கியின் கிளை அல்லது வங்கி இணையதளத்திற்குச் செல்லுங்கள்

(2) உரிமை கோரும் படிவத்தைப் பூர்த்தி செய்யுங்கள்

(3) தேவையான அனைத்து ஆவணங்களுடனும் அதைச் சமர்ப்பிக்கவும்

15 நாட்களுக்குள் கோரிக்கைத் தீர்வு

கணக்கில் நியமனதாரர்/நியமனதாரர்கள் இருந்தால், இந்தச் செயல்முறை இன்னும் விரைவாகவும் எளிதாகவும் முடியும்

உங்கள் அன்புக்குரியவர்களுக்கு உரிமை கோரும் செயல்முறையை எளிதாக்க, இன்றே உங்கள் வங்கிக் கணக்கில் நியமனதாரர்/நியமனதாரர்கள் விவரங்களை பதிவு செய்யுங்கள்.

மேலும் தகவலுக்கு இங்கே கிளிக் செய்யவும்: https://rbikehtahai.rbi.org.in/tamil/index.html

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது

ஆற்று மணல் குவாரிகள் விவகாரம்: நீர்வளத்துறை அதிகாரிகள் சொல்வது என்ன?



சென்னை, செப். 28–

'தமிழகத்தில், நீர்வளத்துறையின் மவுனம் காரணமாக, இப்போதைக்கு ஆற்று மணல் குவாரிகள் திறக்கப்படவில்லை' என, கனிம வளத்துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். தமிழகத்தில் உள்ள ஆற்று மணல் குவாரிகள் நீர்வளத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த குவாரிகளில் இருந்து மணல் எடுக்கப்பட்டு, யார்டுகளில் லாரிகளுக்கு வழங்கும் பணி ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது.இந்த நிலையில், மணல் அள்ளும் ஒப்பந்ததாரர்கள் சட்டவிரோத பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதாக அமலாக்கத்துறை வழக்குப்பதிவு செய்தது. இதன் காரணமாக, 13 இடங்களில் செயல்பட்டு வந்த மணல் குவாரிகள் மூடப்பட்டன.

இதையடுத்து, 30 இடங்களில் குவாரிகளை திறப்பதற்கு கடந்த தி.மு.க. ஆட்சியில் சுற்றுச்சூழல் அனுமதி பெறப்பட்டது. எனினும், ஒப்பந்ததாரரை இறுதி செய்வதில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக, ஆட்சி முடியும்வரை மணல் குவாரிகள் திறக்கப்படவில்லை.ஆட்சி மாற்றத்துக்குப் பிறகு, நியாயமான முறையில் குவாரிகளை திறந்து மணல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது. ஆனால், 4 மாதங்களைக் கடந்தும் குவாரிகள் திறக்கப்படவில்லை.இந்த நிலையில், மணல் லாரி உரிமையாளர்கள் கனிம வளத்துறை அமைச்சர் பிரபுவை சந்தித்து தங்களது கோரிக்கைகளை வலியுறுத்தினர். அப்போது, மணல் குவாரிகளை திறக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இருப்பினும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இருப்பினும், இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.ஆனால், இது குறித்து அதிகாரிகளிடம் கேட்ட போது, உரிய முறையில் எந்த பதிலும் அளிக்காமல் மவுனம் காப்பதால், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை என்கிறார்கள்.

வேலை வாய்ப்பு

IISc–ல் 30 மத்திய அரசு வேலைகள்!

நிறுவனம்: Indian Institute of Science (IISc)
பதவி: Junior Security Assistant
காலியிடங்கள்: 30
வேலை வகை: ஒப்பந்த அடிப்படை
பணியிடம்: பெங்களூரு
விண்ணப்ப தொடக்கம்: 25.09.2026
கடைசி நாள்: 16.10.2026
விண்ணப்ப முறை: ஆன்லைன்
அறிவிப்பு எண்: R(HR)Temp–13(JSA–S&FF)/2026
தகுதியானவர்கள் IISc அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு தெரிவித்த அண்ணா புரட்சித் தலைவர் அம்மா திராவிட முன்னேற்றக் கழகத்தினர்!



திருப்பூர், செப். 28–

அண்ணா புரட்சித் தலைவர் அம்மா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் டாக்டர் விஎஸ்கே செந்தில் குமார் தலைமையில் தமிழகத்தில் நடைபெற உள்ள தாராபுரம் மதுராந்தகம் இடைத்தேர்தலில் ஆளும் தமிழக வெற்றிக் கழகத்திற்கு ஆதரவு தெரிவிப்பதாக தவெக பொதுச் செயலாளரும் அமைச்சருமான புஸ்ஸி ஆனந்த் அவர்களை தாராபுரத்தில் நேரில் சந்தித்து ஆதரவு கடிதத்தினை வழங்கினார்கள் உடன் அமைச்சர்கள் செங்கோட்டையன். அருண்ராஜ். மாவட்டச் செயலாளர்கள் யுவராஜ் மற்றும் அண்ணா புரட்சித் தலைவர் அம்மா திராவிட முன்னேற்றக் கழக மாநில மாவட்ட நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்...

இந்திய பொருளாதாரத்தில் ஆயுஷ் சேவைகள் துறை பங்களிப்பு ரூ.30 லட்சம் கோடியை எட்டும்: ஆய்வில் தகவல்!



புதுடெல்லி, செப். 28–

இந்தியாவில் ஆயுஷ் சேவைகள் துறை வேகமாக வளர்ந்து வருவதும், நாட்டின் பொருளாதாரத்தில் 2047–ம் ஆண்டுக்குள் அதன் பங்களிப்பு ரூ.30 லட்சம் கோடியை எட்டும் எனவும் ஆய்வில் தெரிய வந்துள்ளது.

ஆயுர்வேதம், யுனானி, சித்தா மற்றும் ஓமியோபதி உள்ளிட்ட துறைகளை உள்ளடக்கிய ஆயுஷ் துறைக்கு மத்திய அரசு தனியாக அமைச்சகம் அமைத்து மேம்படுத்தி வருகிறது. இந்த ஆயுஷ் சேவைகள் துறை நாட்டில் வேகமாக வளர்ந்து வருவது கண்டறியப்பட்டு உள்ளது.

வளரும் நாடுகளுக்கான ஆய்வு மற்றும் தகவல் அமைப்பு நடத்திய ஆய்வில், இந்த துறை கடந்த 2022–23 முதல் ஆண்டுதோறும் 16.91 சதவீத வளர்ச்சி கண்டு வருவதாக கூறப்பட்டு உள்ளது. மேலும் சுமார் 18 லட்சம் குடும்பங்களுக்கு நேரடியாக உதவுவதாகவும் தெரிவித்து உள்ளது.

மராட்டிய மாநிலம் நாக்பூரில் சமீபத்தில் நடந்த 11–வது ஆயுர்வேத தினத்தில் இந்த அறிக்கை வெளியிடப்பட்டது. கடந்த 2024–25–ம் ஆண்டில் மட்டும் இந்த துறையில் சுமார் ரூ.17 ஆயிரம் கோடி மருத்துவ மதிப்பீட்டு வருவாய் கிடைத்ததாகவும் அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

இந்த ஆய்வு நிறுவன இயக்குனர் சச்சின் குமார் சர்மா கூறுகையில், "இந்தியாவின் ஆயுஷ் சேவை பொருளாதாரம் குறித்த ஆதார அடிப்படையிலான புரிதலை உருவாக்குவதில் இந்த ஆய்வு ஒரு முக்கிய படியாக விளங்குகிறது. நாடு முழுவதும் உள்ள 6 ஆயுஷ் அமைப்புகளின் 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட நிறுவனங்களில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. நாடு தழுவிய அளவில் நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பில், ஆயுஷ் துறை இந்திய பொருளாதாரத்தில் ஆண்டுக்கு 36.92 பில்லியன் அமெரிக்க டாலர் (சுமார் ரூ.3.53 லட்சம் கோடி) மதிப்பில் பங்களிப்பை செய்கிறது. இது 2047–ம் ஆண்டுக்குள் 318 பில்லியன் டாலர் (சுமார் ரூ.30 லட்சம் கோடி) அளவை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது' என்றார்.

இந்த ஆய்வறிக்கையை பாராட்டிய மத்திய ஆயுஷ் துறை மந்திரி பிரதாப் ராவ் ஜாதவ், ஆயுஷ் சேவை துறையின் பொருளாதார ஆற்றல் அதிகரித்து வருவதை இது காட்டுவதாக கூறினார். இதன் மூலம் ஆயுஷ் துறை வெறும் ஒரு கலாசார மரபு மட்டுமின்றி, அது இந்திய பொருளாதாரத்தின் ஒரு ஆற்றல்மிக்க மற்றும் அதிவேக வளர்ச்சி எந்திரம் என்பதை உறுதிப்படுத்துவதாகவும் கூறினார்.

சுகாதாரம், நல்வாழ்வு, வேலைவாய்ப்பு மற்றும் உலகளாவிய பொருளாதார ஈடுபாடு ஆகியவற்றில் ஆயுஷ் துறை முக்கிய பங்கு வகிப்பதுடன், ஆரோக்கியமான மற்றும் தன்னிறைவு பெற்ற இந்தியா என்ற நமது தொலைநோக்கு பார்வைக்கும் பங்களிக்கும் என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.



தேனி மாவட்டத்தில் குரூப்–1 முதல்நிலை தேர்வை மாவட்டத்தில் 6 மையங்களில் 2,668 பேர்கள் எழுதினார்கள். இதில் ஒரு மையத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்தி நாதன் ஆய்வு செய்து பார்வையிட்டார்.

சினிமா துளிகள்..!

தமிழ் முதல் ஹாலிவுட் வரை... தீரையுலகில் ஒரே நாளில் அதிரடி அப்டேட்கள்!"



தமிழ் 'டோரதி' வசூல் உயர்வு: கீர்த்தி சுரேஷ் நடித்த, கார்த்திக் சுப்பராஜ் இயக்கிய 'டோரதி' இரண்டாவது நாளில் இந்தியாவில் சுமார் ரூ.1.17 கோடி வசூலித்ததாக ஆரம்பகட்ட பாக்ஸ் ஆபிஸ் கணிப்புகள் தெரிவிக்கின்றன. இரண்டு நாள் நிகர வசூல் சுமார் ரூ.2.07 கோடி என கூறப்படுகிறது.

தமிழ் ;

'ஜெயிலர் 2' புதிய பாடல்: ரஜினிகாந்தின் 'ஜெயிலர் 2' படத்திலிருந்து அனிருத் இசையமைத்த புதிய பாடல் வெளியாகியுள்ளது. அதேபோல் தனுஷ் வடிவேலு எஸ்.ஜே.சூர்யா இணையும் D56 படம் மதுரையில் தொடங்கப்பட்டுள்ளது.

தெலுங்கு நானியின் 'The Paradise': நானி கயாடு லோஹர் நடித்த படம் மூன்றாவது நாளில் சுமார் ரூ.15.25 கோடி இந்திய நிகர வசூல் செய்ததாக ஆரம்பகட்ட மதிப்பீடு கூறுகிறது; மூன்று நாள் இந்திய நிகர வசூல் ரூ.76.40 கோடி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையாளம் ;

நிவின் பாலியின் படம் தொடர்ந்து ஓட்டம்: நிவின் பாலி மமிதா பைஜு நடித்த 'Bethlehem Kudumba Unit' 37–வது நாளிலும் திரையரங்குகளில் தொடர்கிறது. அதேவேளையில் பார்வதி திருவோத்து நடித்த 'Pradhama Drishtiya Kuttakkar' படத்தின் இந்திய மொத்த வசூல் ரூ.25.45 கோடி அளவில் இருப்பதாக ஆரம்பகட்ட கணக்குகள் கூறுகின்றன.

இந்தி ;

'The Vvan' வசூலில் முன்னேற்றம்: சித்தார்த் மல்ஹோத்ரா தமன்னா நடித்த 'The Vvan Force of the Forrest' இரண்டாவது நாளில் வசூல் உயர்வைக் கண்டதாக பாக்ஸ் ஆபிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தி 'The Paradise' இந்தி பதிப்பு: நானியின் படத்தின் இந்தி பதிப்பு இரண்டு நாட்களில் சுமார் ரூ.2.10 கோடி வசூல் செய்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஹாலிவுட் ;

'Avengers: Endgame' மீண்டும் அதிரடி: 'Avengers Endgame: Encore' மறுவெளியீடு இந்தியாவில் இரண்டு நாட்களிலேயே ரூ.15 கோடியைக் கடந்ததாக ஆரம்பகட்ட வசூல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹாலிவுட் Scarlett Johansson: 'Paper Tiger' பிரீமியரில் Scarlett Johansson, Colin Jost இருவரும் சுமார் ஓராண்டுக்குப் பிறகு ஒன்றாக ரெட் கார்பெட்டில் தோன்றியது இன்று பொழுதுபோக்கு செய்திகளில் கவனம் பெற்றுள்ளது.

தாராபுரத்தில் அதிமுக கழக பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பிரச்சாரம்!



திருப்பூர், செப். 28–

அதிமுக கழக பொதுச்செயலாளர் முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி கே பழனிச்சாமி அவர்கள் தாராபுரம் சட்டமன்ற தொகுதி, உப்புத்துறை பாளையம் (தாராபுரம் நகரம்) பகுதியில் கழக வெற்றி வேட்பாளர் திருமதி. . பானுமதி அவர்களுக்கு இரட்டை இலை சின்னத்தில் வாக்கு சேகரித்தார்கள். மேலும் வெற்றி பெற்ற வேட்பாளர் மாற்றுக் கட்சிக்கு செல்வதை தொடக்க வேண்டும் எனவும் மேலும் கட்சித்தாவல் இதுபோன்று சென்ற துரோகிகளுக்கு வாக்கு செலுத்த வேண்டாம் எனவும் பொதுமக்கள் அனைவரும் இரட்டை இலைக்கு வாக்கு செலுத்தி பெருவாரியான வாக்கு வித்தியாசம் வெற்றி பெற வைக்க வேண்டும் என கேட்டுக்கொண்டார் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி கே பழனிச்சாமி அவர்களுக்கு பிரச்சாரத்திற்கு செல்லும் போது ஆயிரக்கணக்கான பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்..





தேனி மாவட்டம், பெரியகுளம் அரசு மாவட்ட அரசு மருத்துவமனையில் தாய்மாமன்தங்க மோதிரம் வழங்கும் திட்டத்திற்கு முன்னேற்பாடுகள் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் வைத்திநாதன் நேரில் சென்று ஆய்வு பணிகளை மேற்கொண்டார்.

உலக இதய தினத்தை முன்னிட்டு கரூர் அப்போலா மருத்துவமனை சார்பில் விழிப்புணர்வு மராத்தான் போட்டி நடந்தது. கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் நடந்த இந்நிகழ்ச்சியை நகராட்சி ஆணையர் பிருத்தி விராஜ் கொடி அசைத்து துவக்கி வைத்தார்.ஜவகர்பஜார் ஈஸ்வரன் கோயில் கோவைசாலை மற்றும் ஈரோடு சாலை என முக்கிய சாலைகள் வழியாக மராத்தான் போட்டி நடந்தது.இதில் 500க்கும் மேற்பட்டோர் பங்கு கொண்டனர். தினசரி நடைபயிற்சி யின் அவசியம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 2102 கனஅடியாக அதிகரிப்பு!

மேட்டூர், செப். 28–

மேட்டூர் அணைக்கு வரும் தண்ணீரை விட அதிகளவில் பாசனத்துக்கு திறந்து விடப்பட்டதால் அணையின் நீர்மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. அணைக்கு வினாடிக்கு 1812 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 2102 கனஅடியாக தண்ணீர் அதிகரித்து காணப்பட்டது.

அணையின் நீர்மட்டம் 79.61 அடியாக குறைந்து காணப்பட்டது. அணையில் இருந்து பாசனத்துக்காக வினாடிக்கு 12400 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் தற்போது 41.56 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.



இஸ்மாயில் லக்கி
டூராவல்ஸ்
127, T.P.K.ரோடு,
மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை
ரெகுலர் சர்வீஸ்
பஸ் மற்றும் பார்சல்
சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881



இன்றைய கார்ட்டூன்



தீபாவளிக்கு முன்பே விலை 'ஷாக்'!

சென்னை, செப். 28–

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வீட்டு உபயோகப் பொருட்களுக்கு பெரிய அளவில் தள்ளுபடி கிடைக்கும் என எதிர்பார்த்த மக்களுக்கு விலை உயர்வு அதிர்ச்சி காத்திருக்கிறது. அக்டோபர் 1 முதல் ஏசி, வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், எல்ஈடி டிவி உள்ளிட்ட எலக்ட்ரானிக்ஸ் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களின் விலை உயர உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. காப்பர், ஸ்டீல், கச்சா எண்ணெய், பெட்ரோலியம் சார்ந்த மூலப்பொருட்களின் விலை மற்றும் இறக்குமதிச் செலவு அதிகரித்ததால் உற்பத்திச் செலவு உயர்ந்துள்ளதாக நிறுவனங்கள் தெரிவிக்கின்றன. இதனால் ஏசி விலை 5 முதல் 8 சதவீதம் வரையும், வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், எல்ஈடி டிவி விலை 3 முதல் 4 சதவீதம் வரையும் அதிகரிக்கலாம்.



ப்ளூ ஸ்டார், காட்ரிஜ் அப்ளையன்ஸ், ஹேயர், டாய்கின் உள்ளிட்ட நிறுவனங்கள் 4 முதல் 10 சதவீதம் வரை விலை உயர்வை அறிவித்துள்ளதாக கூறப்படுகிறது. 2026–ல் இது மூன்றாவது விலை உயர்வாகும். இருப்பினும், டீலர்களிடம் ஏற்கெனவே உள்ள இருப்பு மற்றும் தீபாவளி தள்ளுபடிகள் காரணமாக நுகர்வோருக்கு ஏற்படும் கூடுதல் செலவு ஓரளவு குறையலாம் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோலோ புயல்; ஹவாய் தீவில் அவசரநிலை பிரகடனம்!

ஹொனலுலு, செப். 28–

நோலோ புயலை முன்னிட்டு, ஹவாய் தீவில் அவசரநிலை பிரகடனம் செய்யப்பட்டு உள்ளது. நோலோ சூறாவளிப்புயல் ஹவாய் தீவுகளை நோக்கி அதிவேகமாக நகர்ந்து வருகிறது. சக்தி வாய்ந்த புயலை முன்னிட்டு, பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்து வருகிறது. மத்திய பசிபிக் பெருங்கடலில் நிலைகொண்டுள்ள இந்த புயல், ஹவாயின் பிக் ஐலேண்ட்பகுதிக்கு தெற்கே நகர்ந்து செல்கிறது. இதனால் நேற்று அங்கு 51 செ.மீ. வரை அதீத மழை பெய்தது.

இதனால் சாலைகளில் நீர்வரத்து அதிகரித்து வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது. புயல் நேரடியாக கரையை கடக்காது என்ற போதிலும், அதன் வெளிவட்டப்பகுதிகள் பெரும் பேரழிவை ஏற்படுத்தக்கூடும் என்பதால் தீவு முழுவதும் அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.



புயலால், 16 அங்குலம் அளவுக்கு மழைப்பொழிவு இருக்கும். பலத்த காற்றும் வீசக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், புயலானது இன்று காலையில் இருந்து தொடர்ந்து மேற்கு நோக்கி பயணிக்கிறது. இதனால், பொதுமக்கள் தொடர்ந்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

கடலோர பகுதிகளில் பெரிய அளவில் மற்றும் பாதிப்பு ஏற்படுத்த கூடிய அளவில் அலைகள் வீசும். இதனால், மக்கள் கடற்கரை பகுதிகளுக்கு செல்ல வேண்டாம். வெள்ளம் பாதிக்க கூடிய பகுதிகளை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

ராமர் பாலத்தை படகு மூலம் பார்வையிட ஆன்மிக சுற்றுலா தொடக்கம்!

தலைமன்னார், செப். 28–

ராமர் பாலத்தை படகு மூலம் சென்று பார்வையிடும் வகையில் ஆன்மிக சுற்றுலாவை இலங்கை அரசு தொடங்கியிருக்கிறது.

ராமாயணத்தில் சீதையை சிறைபிடித்த ராவணன், இலங்கைக்கு தூக்கி சென்ற நிலையில், சீதையை மீட்க ராமன், தனது சகோதரர் லட்சுமணன் மற்றும் ஹனுமன் உள்பட வானர சேனைகளை கொண்டு தனுஷ்கோடி முதல் இலங்கை வரை கடலில் பாலம் அமைத்தார். பின்னர் அந்த பாலத்தில் சென்று ராவணனுடன் போரிட்டு சீதையை மீட்டு வந்தார்.

இந்த வரலாற்று புகழ்பெற்ற ராமர் பாலத்தை செயற்கைகோள் புகைப்படத்தில் தற்போதும் காணமுடிகிறது. தமிழகத்தின் தனுஷ்கோடி முதல் இலங்கை தலைமன்னார் வரை 18 மணல் திட்டுகளாக இருக்கும் ராமர் பாலத்தில், 6 திட்டுகள் இந்திய எல்லைக்குள் இருக்கின்றன. மீதமுள்ள 12 திட்டுகள் இலங்கை கடற்பரப்பில் வருகின்றன. இந்த நிலையில், ராமர் பாலத்தை ஆன்மிக சுற்றுலா வளையத்திற்குள் கொண்டுவர இலங்கை அரசு திட்டமிட்டு இருந்தது. அதன் ஒரு பகுதியாக, கடந்த 25–ந் தேதி இலங்கை வடக்கு மாகாண கவர்னர் வேதநாயகம், மன்னார் கலெக்டர் கனவேஸ்வரன், வடக்கு மாகாண சுற்றுலாத் தலைவர் விவேகானந்தன் உள்ளிட்ட அதிகாரிகள் 4 படகுகளில் தலைமன்னாரில் இருந்து புறப்பட்டு ராமர் பாலத்தின் 3 மணல் திட்டுகள் வரை வந்து சோதனை ஓட்டம் நடத்தினார்கள்.



அப்போது, சுற்றுலா படகு சவாரியின்போது மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு அம்சங்கள் குறித்தும் ஆலோசனை நடத்தப்பட்டது. இந்த நிலையில், ராமர் பாலத்தை படகு மூலம் சென்று தரிசிக்கும் ஆன்மிக சுற்றுலாவை இலங்கை அரசு இன்று (திங்கட்கிழமை) தொடங்கியிருக்கிறது. இதன் மூலம் இந்திய ஆன்மிக சுற்றுலா பயணிகளையும் கவர முடியும் என்று இலங்கை அரசு நம்புகிறது. அன்னிய செலாவணியும் அதிகரிக்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

வரும் தேர்தல்களில் த.வெ.க.வுக்கு எதிர்கட்சியே இருக்காது- அமைச்சர் செங்கோட்டையன்!

சென்னை, செப். 28–

விஜய் சேப்பாக்கம் சென்று இருந்தால் உதயநிதி ஸ்டாலின் அவ்வளவு தான். நேரம் பத்தவில்லை. 10 மாவட்டங்களுக்கு விஜய் சென்று இருந்தால் கொளத்தூர் போலதான் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கலாம். காவல்துறை அனுமதி அளிக்காததே இதற்கு காரணம். தாராபுரம் போலீஸ் நிலையம் அருகே நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வேட்பாளர் சத்தியபாமாவை ஆதரித்து அமைச்சர் செங்கோட்டையன் பேசியபோது கூறியதாவது:–

எடப்பாடி பழனிசாமி நல்ல காரியமாக என்னை நீக்கம் செய்ததால் தான் நான் இங்கு உள்ளேன். தற்போது சட்டசபையில் எனக்கு நேராக அமர்ந்து இருக்கிறார். நான் பார்த்தால் தலையை குனிந்து கொள்கிறார். வெட்க்கப்படுகிறார். ஏன், செங்கோட்டையனை கட்சியில் இருந்து நீக்கினோம் என்று இப்போது நினைக்கிறார். எடப்பாடி பழனிச்சாமிக்கு சவுக்கடி கொடுத்துள்ளார் சத்தியபாமா.

உடுமலை ராதாகிருஷ்ணன் தோல்வியால் வீட்டில் இருந்தார். ஆனால் கட்சியில் இருந்து நீக்கிவிட்டார். 9 முறை வெற்றிபெற்ற என்னை தூக்கி விட்டார். அவரை கை காட்டி அரசியலுக்கு கொண்டு வந்த நான் தடுமாறி நின்றேன். எடப்பாடி பழனிச்சாமி ஒய்வு காலத்தில் ஆடி வருகிறார். எடப்பாடி தொகுதியில் அருண் என்ற வேட்பாளர் பெட்டி வாங்கிகொண்டு ஓடி விட்டார்.

என் உயிர் உள்ளவரை த.வெ.க.வில் தான் இனிமேல் இருப்பேன். நிரந்தர முதலமைச்சர் விஜய் தான். அதற்காக



என் உயிரையும் கொடுத்து பாடுபடுவேன். விஜய் சேப்பாக்கம் சென்று இருந்தால் உதயநிதி ஸ்டாலின் அவ்வளவு தான். நேரம் பத்தவில்லை. 10 மாவட்டங்களுக்கு விஜய் சென்று இருந்தால் கொளத்தூர் போலதான் 234 தொகுதிகளிலும் வெற்றி பெற்றிருக்கலாம். காவல்துறை அனுமதி அளிக்காததே இதற்கு காரணம்.

ஓட்டலில் செங்கோட்டையன், நான், திண்டுக்கல் சீனிவாசன், சசிகலா ஆகியோர் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த போது திடீரென மலைப்பாம்பை போல கீழே விழுந்து பதவிக்கு வந்தவர் எடப்பாடி பழனிச்சாமி. திடீர் என்று விழுந்தார் நானே பயந்துவிட்டேன். வரும் தேர்தலில் எடப்பாடி பழனிச்சாமி இருக்கவே மாட்டார். தி.மு.க., உதயநிதி ஸ்டாலின் என யாரும் இருக்க மாட்டார்கள். இனிமேல் எதிர்க்கட்சி என்று என்பதே இல்லை.

மதுராந்தகம், தாராபுரம் இடைத்தேர்தலுக்கு பிறகு இடைத்தேர்தலில் போட்டியிட கட்சியே இருக்காது. காங்கிரஸ் கட்சியினர் கடைசியில் சொதப்பிவிட்டனர் . இல்லையென்றால் 234 தொகுதிகளிலும் வெற்றி தான்.

நான் அப்போதே கூறினேன் கே.வி. ஆர். ராமலிங்கம், உடுமலை ராதாகிருஷ்ணன் ஆகியோரை கட்சிக்கு வருமாறு அழைத்தேன். ஆனால் அவர்கள் வரவில்லை கே.வி. ராமலிங்கம் ஒரு கல்யாணத்தின்போது உடல்நிலை சரியில்லாமல் போனதால் மருத்துவமனையில் அனுமதி ஆகிவிட்டார். அதனால் அவரும் நினைவில்லை. தற்பொழுது அனைவரும் வருத்தப்படுகின்றனர்.

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் அமைச்சர்கள் என். ஆனந்த், அருண்ராஜ், பர்வேஷ், ரமேஷ், ராஜேஷ் கரூர் எம்.பி.ஜோதிமணி உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

ஒரு ஓட்டில் தோல்வி: திமுக முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன் மனு நிராகரிப்பு!

சென்னை, செப். 28–

திருப்பத்தூர் தொகுதியில் ஒரு வாக்கு வித்தியாசத்தில் தவெக எம்எல்ஏ சீனிவாச சேதுபதி வெற்றி பெற்றதை எதிர்த்து திமுக முன்னாள் அமைச்சர் பெரியகருப்பன் தாக்கல் செய்த தேர்தல் வழக்கை நிராகரித்து சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

சட்டப்பேரவைத் தேர்தலில், சிவகங்கை மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் தவெக சார்பில் போட்டியிட்ட சீனிவாச சேதுபதி, ஒரு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார். சீனிவாச சேதுபதி, 83, 375 வாக்குகள் பெற்ற நிலையில், அவரை எதிர்த்து போட்டியிட்ட திமுக வேட்பாளர் முன்னாள் அமைச்சர் பெரிய கருப்பன், 83, 374 வாக்குகளைப் பெற்றிருந்தார். சீனிவாச சேதுபதியின் வெற்றியை எதிர்த்து பெரியகருப்பன், சென்னை உயர்நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கை தாக்கல் செய்திருந்தார். அந்த





மனுவில், சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்கு பதிவான தபால் வாக்கு, திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் தொகுதிக்கு அனுப்பப்பட்ட தால் தான் தோல்வியடைந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. தனக்கு எதிரான இந்த தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி சீனிவாச சேதுபதி மனு தாக்கல் செய்திருந்தார். இந்த வழக்கு விசாரணை யின்போது,தவெக எம்எல்ஏ சீனிவாச சேதுபதி தரப்பில், தொகுதிகள், எண் அடிப்படையில் மட்டுமே அடையாளம் காணப்படுகிறது. பெயர் அடிப்படையில் அல்ல. தபால் வாக்குகளின் உறைகளில், தொகுதி எண், பெயர், மாவட்டம் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும். ஒரு தபால் வாக்கு வேறு தொகுதிக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தேர்தல் வழக்கில் கூறியுள்ளதற்கு எந்த அடிப்படையும் இல்லை என வாதிடப்பட்டிருந்தது. தேர்தல் வழக்கை நிராகரிக்க வேண்டும் என்ற தவெக எம்எல்ஏ–வின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என திமுக வேட்பாளர் பெரியகருப்பன் தரப்பில் வாதிடப்பட்டிருந்தது. இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த வழக்கில் திங்கள்கிழமை தீர்ப்பளித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி சீனிவாச சேதுபதி தாக்கல் செய்த மனுவை ஏற்று, திமுக வேட்பாளர் பெரியகருப்பன் தாக்கல் செய்த தேர்தல் வழக்கை நிராகரித்து உத்தரவிட்டார்.

ரூ.2500 மகளிர் உரிமைத்தொகை கேட்டு கலெக்டர் அலுவலகத்தில் மலைபோல் குவியும் மனுக்கள்!

திருச்சி, செப். 28–

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வாரந்தோறும் நடக்கும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மகளிர் உரிமைத்தொகை கேட்டு 300–க்கும் மேற்பட்ட பெண்கள் மனு கொடுத்து வருகின்றனர்

தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகையாக மாதம் ரூ.2,500 வழங்கப்படும்



என்று த.வெ.க. அரசு தேர்தல் அறிக்கையில் அறிவித்த நிலையில், ஏழை எளிய மக்கள் உரிமைத் தொகை எப்போது கிடைக்கும் என எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

திருச்சி மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வாரந்தோறும் நடக்கும் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் மகளிர் உரிமைத்தொகை கேட்டு 300–க்கும் மேற்பட்ட பெண்கள் மனு கொடுத்து வருகின்றனர். வரிசையில் காத்திருக்க விடாமல் தனியாக ஆள் போட்டு மனுக்களை சமூக பாதுகாப்பு திட்ட பிரிவினர் வாங்கி வருகின்றனர்.

புதிய அரசு பொறுப்பேற்று 4 மாதங்களை கடந்த நிலையில் குறைதீர் முகாம்களில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் மனு கொடுத்துள்ளனர். தாலுகா அளவிலான முகாம்கள், ஜமாபந்தி மற்றும் முதல்வரின் தனிப்பிரிவிற்கும் பல ஆயிரம் விண்ணப்பங்கள் குவிந்து வருகின்றன.

இது குறித்து குறைதீர் முகாமிற்கு வந்த பெண்கள் கூறுகையில், நாங்கள் தரும் விண்ணப்பங்களுக்கு வாங்கும் ரசீது ஒரு மாதத்தில் காலாவதியாகி விடுகிறது. மீண்டும் விண்ணப்பிக்கும் நிலை ஏற்படுகிறது. அரசு தரப்பில் இருந்து தெளிவான பதில் வந்தால் நன்றாக இருக்கும் என்றனர்.

தங்கம், வெள்ளி அதிரடி விலை குறைவு!



சென்னை, செப். 28–

வாரத்தின் முதல்நாளான தங்கம், வெள்ளி விலை அதிரடியாக குறைந்துள்ளது. இதன்படி சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,880 குறைந்து ரூ.1,10,120–க்கு விற்பனை செய்யப்படுகிறது. மேலும் தங்கம் விலை கிராமுக்கு ரூ.235 குறைந்து ஒரு கிராம் ரூ.13,765–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதேபோல் வெள்ளி விலையும் குறைந்துள்ளது. சென்னையில் வெள்ளி விலை கிலோவுக்கு ரூ.5,000 குறைந்து ஒரு கிலோ ரூ.2,40,000க்கு விற்பனை செய்யப்படுகிறது. அதுவே கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் ரூ.245க்கு விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த சில நாட்களாக தங்கம், வெள்ளி விலை குறைந்து வருவது மக்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஹரியாணாவில் 250 அடி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 3 வயது சிறுமி பலி!

ஹரியானா, செப். 28–

ஹரியாணாவில் 250 அடி ஆழ்துளைக் கிணற்றில் விழுந்த 3 வயது சிறுமி 10 மணி நேர மீட்புப் பணிக்குப் பிறகு பலியானதாக அதிகாரிகள் திங்கள்கிழமை தெரிவித்தனர்.

ஹரியாணா மாநிலம், ஃபரிதாபாத்தின் சீஹி கிராமத்தில் நேஹா என்கிற 3 வயது சிறுமி, ஞாயிற்றுக்கிழமை மாலை தனது வீட்டின் அருகே மற்ற குழந்தைகளுடன் விளையாடியிருக்கிறார். அப்போது அந்த சிறுமி 250 அடி ஆழமுள்ள ஆழ்துளைக் கிணற்றில் எதிர்பாராதவிதமாக தவறி விழுந்தார்.



சுமார் 10 மணி நேரம் நீடித்த மீட்புப் பணிக்குப் பிறகு, திங்கள்கிழமை அதிகாலை 4 மணியளவில் சிறுமி வெளியே கொண்டு வரப்பட்டார். இருப்பினும், மீட்கப்பட்டபோது சிறுமியின் உடலில் எந்த அசைவும் இல்லை. உடனடியாக அவர் தனியார் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அங்கு மருத்துவர்கள் சிறுமி இறந்துவிட்டதாக உறுதிப்படுத்தினர். சிறுமியின் உடல் தற்போது கூராய்வு செய்யப்பட்டுள்ளது. ஆழ்துளைக் கிணறு ஃபரிதாபாத் நகராட்சிக்குச் சொந்தமானது என்றும், சுமார் 15 ஆண்டுகளாக அது பயன்பாட்டில் இல்லாமல் இருந்தது என்றும் சிறுமியின் தந்தை ராம்டின் தெரிவித்தார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020